1973 பிப்ரவரி 12]

கள், சாராயக்கடை ஏலத்தில் கிடைத்த தொகை

**129.* வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள், சாராயக் கடைகளின் ஏலத்தொகைகளிலிருந்து பங்கு கோரி, பஞ்சாயத்து யூனியன்கள் எவையேனும் அரசுக்கு விண்ணப்பித்துள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். சில ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மேலும் சில நகராட்சிகளும் விண்ணப்பித்ததை அனுமதிக்க இயலாது என்று அரசு முடிவெடுத்து அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : மதுவிலக்கைத் தள்ளி வைத்துவிட்ட பிறகு கிராமங்களில் உள்ள ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாகக் குடித்துக் கெட்டுப்போய் விடுகிறார்கள். அதை உத்தேசித்தாவது அரசாங்கம் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

திரு. மா. வே. நாராயணசாமி : நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் நிரம்ப இருக்கின்றன. நகராட்சி மன்றங்கள் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு சுகாதார அடிப்படையில் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் எப்படி கேளிக்கை வரி நகராட்சிமன்றத்திற்கு வருகிறதோ அதே போல் இந்த மதுக்கடைகள் வாயிலாக வரும் வருவாயில் ஒரு பகுதியை நகராட்சி மன்றங்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இயலாது என்று ஏற்கனவே பதிலில் தெரிவித்துவிட்டேன்.

திரு. த. சோனையா : திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கள்ளுக் கடைகள்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருப்புவனம் பற்றி எப்படிச் சொல்ல முடியும்? பொதுவாகக் கேளுங்கள்.